www.Padasalai.Net www.CBSEtips.in

V8T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 8

தமிழ்

காலம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

## பகுதி - 1

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 10×1=10

1) பானை ................ ஒரு சிறந்த கலையாகும்.
அ) செய்தல் ஆ) வனைதல் இ) முடைதல் ஈ) சுடுதல்

2) விகாரப்புணர்ச்சி ................ வகைப்படும்.
அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

3) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ................
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை

4) உடனிகழ்ச்சிப் பொருளில் ................ வேற்றுமை வரும்.
அ) ஆறாம் ஆ) ஐந்தாம் இ) நான்காம் ஈ) மூன்றாம்

5) கோயிலப்பா என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................
அ) கோ+அப்பா ஆ) கோயில்+லப்பா
இ) கோயில்+அப்பா ஈ) கோ+இல்லப்பா

6) கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ................
அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த

7) பருத்தி+எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................
அ) பருத்தி எல்லாம் ஆ) பருத்தெல்லாம்
இ) பருத்திதெல்லாம் ஈ) பருத்தியெல்லாம்

8) வாசலெல்லாம் - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ................
அ) வாசல்+எல்லாம் ஆ) வாசல்+லெல்லாம்
இ) வாசம்+எல்லாம் ஈ) வாசு+எல்லாம்

9) பறவைகள் ................ பறந்து செல்கின்றன.
அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்

10) அரசரை அவரது ................ காப்பாற்றும்.
அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5×1=5

11) சேரர்களின் நாடு ................ எனப்பட்டது.

12) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ................ என அழைக்கப்பட்டன.

13) நீலகேசி கூறும் நோயின் வகைகள் ................

14) புறஉலக ஆராய்ச்சிக்கு ................ கொழுகொம்பு போன்றது.

15) கீழிதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ................

**இ) பொருத்துக:** 5×1=5

| | | |
|---|---|---|
| 16) வினைமுற்றுத்தொடர் | - | பத்துப்பாட்டு |
| 17) பெயரெச்சத்தொடர் | - | கம்பராமாயணம் |
| 18) இயற்கை ஓவியம் | - | எழுதிய பாடல் |
| 19) எழுவாய்த் தொடர் | - | வென்றான் பாண்டியன் |
| 20) இயற்கை பரிணாமம் | - | கார்குழலி படித்தாள் |

## பகுதி - 2

**ஈ) குறுகிய விடையளி:**

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** 4×2=8

21) பகத்சிங் கண்ட கனவு யாது?

22) உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

23) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?

24) பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?

25) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** 4×2=8

26) ஒலி எழுத்துநிலை என்றால் என்ன?

27) இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?

28) விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

29) எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

30) கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** 2×2=4

31) சந்திப்பிழை என்றால் என்ன?

32) தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

33) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

## பகுதி - 3

**உ) அனைத்திற்கும் விடையளி:** 3×4=12

**அ) சிறுவினா:**

34) அ) கோணக் காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை? **(அல்லது)**

ஆ) இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

35) அ) கொங்குமண்டலச் சதகம் கூறும் கொங்குமண்டலத்தின் எல்லைகள் யாவை? **(அல்லது)**

ஆ) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

36) அ) முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக. **(அல்லது)**

ஆ) இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**ஆ) சிந்தனை வினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** 2×5=10

37) சிறந்த அறிவியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

38) நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?

39) வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பண்புநலன்களாக நீங்கள் கருதுவன யாவை?

## பகுதி - 4

**ஊ) அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

40) வாழ்க நிரந்தரம் - எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப்பாடல்.

41) 'சொல்' - என முடியும் திருக்குறள்.

## பகுதி - 5

**எ) மொழிப்பயிற்சி: (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** 4×2=8

42) **மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

அ) முதலைக் கண்ணீர் ஆ) எடுப்பார் கைப்பிள்ளை

43) **உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக:**

அ) திரு.வி.க எழுதிய பெண்ணின் பெருமை எனும் நூல் புகழ்பெற்றது.

ஆ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.

44) **பிழைகளைத் திருத்தி எழுதுக:**

அ) பகைவர் நீவீர் அல்லர்.

ஆ) பானையை உடைத்தது நிழலன் அல்ல.

45) **ஒரு சொல் ஒரே தொடரில் பலபொருள் தருமாறு எழுதுக:**

அ) திங்கள் ஆ) ஆறு

46) **தொடர்களை மாற்றுக:**

அ) அதிகாலையில் துயில் எழுவது நல்லது. **(விழைவுத் தொடராக்குக)**

ஆ) காடு மிகவும் அழகானது. **(உணர்ச்சித் தொடராக்குக)**

47) **கலைச்சொல் தருக:**

அ) The Hero ஆ) Thicket

## பகுதி - 6

**ஏ) விரிவான விடையளி:** 3×8=24

48) அ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

ஆ) கொங்குநாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

49) அ) காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக.

50) அ) நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com